# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1799 - 2013 පෙබරවාරි මස 22 වැනි සිකුරාදා - 2013.02.22

*1799 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 14 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மாச்சு மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/36334
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : EP/28/LES/Tri/MW/362

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவில், 230சீ ஆம் இலக்க நொச்சிக்குளம் கிராம அலுவலர் பிரிவில், மயிலகுடாவெவ கிராமத்தில் அமைந்துள்ள, TRI/MW/2008/140 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு A எனக் காட்டப்பட்ட சுமார் 80 பேர்ச்சுகள் விஸ்தீரணமுடைய அரச காணித் துண்டொன்றை வர்த்தக நோக்கத்திற்காக (எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றை அமைப்பதற்காக) திரு. லொக்கு கலப்பத்தி சுசந்த என்பவர் குத்தகைக்குத் தருமாறு விண்ணப்பித்துள்ளார் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : கால்வாய் ஒதுக்கம் ;
கிழக்கு : துண்டு இல. 2242 இன் ஒரு பகுதி ;
தெற்கு : அநுராதபுரம் - திருகோணமலை பிரதான வீதியின் வீதி ஒதுக்கம் ;
மேற்கு : அரசாங்கக் காணி.

விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியை தேவையான நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். எனவே, அரசாங்கத்தின் நியம நிபந்தனைகளுக்கும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சரினால் குத்தகை அங்கீகரிக்கப்படுகின்ற திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகைத் தொகை.**- பிரதம மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட, வருடத்தில் காணியின் வர்த்தகப் பெறுமதியில் 4 % வீதமாகும். இக்குத்தகைத் தொகை ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தப்பட வேண்டுமென்பதுடன், அது முந்திய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட குத்தகைத் தொகையில் 50% வீதத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும் ;

தவணைப்பணம்.- வருடாந்த குத்தகைத் தொகையைப் போன்று மும்மடங்காகும்.

(ஆ) குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளர் திருப்திப்படும் வண்ணம் குத்தகைக்காரரினால் இக்காணி அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கத்தைத் தவிர வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படுதல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளரினாலும், பிற நிறுவனங்களினாலும் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படுதல் வேண்டும் ;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது காணியைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை அடைவதற்கு குறித்த காலப்பகுதியில் குத்தகைக்காரர் தவறும் பட்சத்தில் குத்தகையை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஊ) ஐந்து (05) வருட ஆகக் குறைந்த குத்தகைக் காலம் முடிவதற்கு முன்பதாக கீழ்க் குத்தகைக்கு வழங்க முடியாது ;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு செய்வதற்குத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தம் தானாகவே இரத்தாகும்.

(ஏ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

இங்கு கீழ்க்காணும் திகதியிலிருந்து 06 வார காலப்பகுதிக்குள், குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்கான தகுந்த காரணங்கள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்கப்படாத பட்சத்தில் கோரிக்கைக்கு அமைவாக இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்ஹ,
உதவிக் காணி ஆணையாளர் (காணி),
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணி செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.01.23.

2-620

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/34670
பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : අම්/නිඉකො/දීබ/3/1997

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவில், சேனாநாயக்கபுரம் கிராம அலுவலர் பிரிவில், சேனாநாயக்கபுரம் கிராமத்தில் அமைந்துள்ள, AM/AMP/2011/181 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் துண்டு A எனக் காட்டப்பட்ட சுமார் 0.6294 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய அரச காணித் துண்டொன்றை வர்த்தக நோக்கத்திற்காக திரு. ஜூலியன் பிரின்ஸ் கருணாரத்ன என்பவர் குத்தகைக்குத் தருமாறு விண்ணப்பித்துள்ளார் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : துண்டு இல. 73, 357, 663, 144 ;
கிழக்கு : இக்காணியின் துண்டு பி ;
தெற்கு : இக்காணியின் துண்டு பி மற்றும் துண்டு இல. 144 உம் 663 உம் ;
மேற்கு : துண்டு இல. 144, 663, 389, 890, 888, 73.

விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியை தேவையான நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். எனவே, அரசாங்கத்தின் நியம நிபந்தனைகளுக்கும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2012.08.28 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகைத் தொகை.**- பிரதம மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் 2012 ஆம் வருடத்தில் காணியின் வர்த்தகப் பெறுமதியில் 4 % வீதமாகும். இக்குத்தகைத் தொகை ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தப்பட வேண்டுமென்பதுடன், அது முந்திய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட குத்தகைத் தொகையில் 50% வீதத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும் ;

தவணைப்பணம்.- வருடாந்த குத்தகைத் தொகையைப் போன்று மும்மடங்காகும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கத்தைத் தவிர வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படுதல் கூடாது ;

(இ) குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளர் திருப்திப்படும் வண்ணம் குத்தகைக்காரரினால் இக்காணி அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் ;

(ஈ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணிச் செல்லப்படல் வேண்டும் ;

(உ) பிரதேச செயலாளரினாலும், பிற நிறுவனங்களினாலும் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படுதல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது காணியைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை அடைவதற்கு குறித்த காலப்பகுதியில் குத்தகைக்காரர் தவறும் பட்சத்தில் குத்தகையை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) ஐந்து (05) வருட ஆகக் குறைந்த குத்தகைக் காலம் முடிவதற்கு முன்பதாக கீழ்க் குத்தகைக்கு வழங்க முடியாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு செய்வதற்குத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தம் தானாகவே இரத்தாகும்.

இங்கு கீழ்க்காணும் திகதியிலிருந்து 06 வார காலப்பகுதிக்குள், குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்கான தகுந்த காரணங்கள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்கப்படாத பட்சத்தில் கோரிக்கைக்கு அமைவாக இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணி செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.01.22.

2-621

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/35031
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : ත්‍රි/ඉ/ 5/ මොර/ කලු

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவில், 1126 ஆம் இலக்க 16 ஆம் அலகு, வென்ராசபுரம், கந்தளாய் கிராம அலுவலர் பிரிவில், நாமல்வத்த கிராமத்தில் அமைந்துள்ள, குடியிருப்பு உத்தியோகத்தர் சுவடு வரைபடத்தில் துண்டு A எனக் காட்டப்பட்ட சுமார் 01 ஏக்கர், 02 றூட் விஸ்தீரணமுடைய அரச காணித் துண்டொன்றை வர்த்தக நோக்கத்திற்காக திரு. சியம்பலாபிட்டிகே தொன் சிதன்த நாலக குமார என்பவர் குத்தகைக்குத் தருமாறு விண்ணப்பித்துள்ளார் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : அரசாங்கக் காணி ;
கிழக்கு : அரசாங்கக் காணி ;
தெற்கு : அரசாங்கக் காணியும் கிளை வீதியும் ;
மேற்கு : அரசாங்கக் காணியும் கிளை வீதியும்.

விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியை தேவையான நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். எனவே, அரசாங்கத்தின் நியம நிபந்தனைகளுக்கும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சரினால் குத்தகை அங்கீகரிக்கப்பட்ட திகதியாகிய 2012.10.05 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகைத் தொகை**.- பிரதம மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் சட்டரீதியாகக் காணி கையளிக்கப்பட்ட 1995 ஆம் வருடத்தில் காணியின் வர்த்தகப் பெறுமதியில் 4 % வீதமாகும். இக்குத்தகைத் தொகை ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தப்பட வேண்டுமென்பதுடன், அது முந்திய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட குத்தகைத் தொகையில் 50% வீதத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும் ;

தண்டப்பணம்.- காணியின் வர்த்தகப் பெறுமதியில் 4% போன்று மும்மடங்காகும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கத்தைத் தவிர வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படுதல் கூடாது ;

(இ) குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளர் திருப்திப்படும் வண்ணம் குத்தகைக்காரரினால் இக்காணி அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் ;

(ஈ) பிரதேச செயலாளரினாலும், பிற நிறுவனங்களினாலும் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படுதல் வேண்டும் ;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது காணியைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை அடைவதற்கு குறித்த காலப்பகுதியில் குத்தகைக்காரர் தவறும் பட்சத்தில் குத்தகையை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஊ) ஐந்து (05) வருட ஆகக் குறைந்த குத்தகைக் காலம் முடிவதற்கு முன்பதாக கீழ்க் குத்தகைக்கு வழங்க முடியாது ;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு செய்வதற்குத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தம் தானாகவே இரத்தாகும்.

இங்கு கீழ்க்காணும் திகதியிலிருந்து 06 வார காலப்பகுதிக்குள், குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்கான தகுந்த காரணங்கள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்கப்படாத பட்சத்தில் கோரிக்கைக்கு அமைவாக இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்ஹ,
உதவிக் காணி ஆணையாளர் (காணி),
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணி செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.01.23.

2-622

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.